## சாதனைத் திட்டங்கள் – வலிமையான கூட்டணி – கொள்கை வலிமையால் மக்கள் எங்களுக்கு உறுதியாக வாக்களிப்பார்கள்!

# 200 க்கும் மேற்பட்ட இடங்களில் தி.மு.க. கூட்டணி வெல்வது உறுதி!

## ‘தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஆங்கில நாளிதழுக்கு தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புப் பேட்டி!

சென்னை, ஏப்.12-

**‘திராவிட மாடல்’ அரசின் வரலாற்றுப் பெருமைக்குரிய சாதனைத் திட்டங்கள், வலிமையான கூட்டணி, கொள்கை வலிமை முதலியவற்றால் மக்கள் திராவிட மாடல் 2.0 ஆட்சிக்கு உறுதியாக வாக்களிப்பார்கள் எனவும். தமிழ்நாடு எப்போதும், எவருக்கும் தலைகுனியாது! 200க்கும் மேற்பட்ட இடங்களில் தி.மு.க. உறுதியாக வெற்றி பெறுவோம் என்றும் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஆங்கில நாளிதழுக்கு நேற்று முன்தினம் (10.4.2026) அளித்துள்ள நேர்காணலின் போது உறுதிபடக் குறிப்பிட்டார்.**


CM M K Stalin tells TNIE's **Prabhakar Tamilarasu & Pon Vasanth B A**, that the DMK govt's path-breaking welfare schemes, strong coalition, and ideological strength will ensure people's mandate for Dravidian Model 2.0

**‘Tamil Nadu won't bow down’**

Politically Correct

Thalaivar Kalaignar taught me for over 60

There is no rift within our coalition nor any delay in

PIC: P JAWAHAR

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளார். ஆங்கில நாளிதழான ‘தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்’க்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்துள்ள நேர்காணலில், மாநிலம் முழுவதும் மக்களின் மனநிலை உறுதியாக “திராவிட மாடல் 2.0 ஆட்சிக்கு” ஆதரவாக உள்ளது என்று அவர் கூறினார்.

### அனைத்துத் திட்டங்களும் அடித்தட்டு மக்களைச் சென்றடைந்துள்ளன!

ஒவ்வொரு குடும்பத்தையும் சென்றடைந்த நலத்திட்டங்களால், கடந்த ஐந்து ஆண்டுகளில் தனது அரசின் மீது மக்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளதாக ஸ்டாலின் தெரிவித்தார். தனது தேர்தல் பிரச்சாரப் பயணத்தை நினைவு கூர்ந்த அவர், அரசின் நலத்திட்டங்கள் எந்த அளவிற்கு அடித்தட்டு மக்களைச் சென்றடைந்துள்ளன என்பதே மிகவும் வியக்கத்தக்க விஷயமாக இருந்ததாகக் குறிப்பிட்டார். குறிப்பாக, காலை உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக முதல்வர் கூறினார்.

தமது தந்தை மு. கருணாநிதியின் பாரம்பரியத்தைத் தாண்டி, ஒரு தனித்துவமான **“ஸ்டாலின் பாணியை”** (Stalin flavour) உருவாக்கியிருப்பதாகக் கூறப்படுவதை மறுத்த அவர், “இந்த ஸ்டாலின் ஒரு தனிநபர் அல்ல” என்று கூறினார். பெரியார் மற்றும் அண்ணாவிலிருந்து கலைஞர் வரை தொடரும் திராவிடப் பாரம்பரியத்தின் நீட்சியாகவே தன்னை விவரித்த அவர், இதை “திராவிடச் சுவை” என்று அழைக்கவே விரும்புவதாகத் தெரிவித்தார்.

### தி.மு.க.வெற்றிக்கூட்டணி!

கூட்டணி குறித்துப் பேசுகையில், உறவுகளில் விரிசல் இருப்பதாகக் கூறப்படுவதை

## தமிழ்நாடு எப்போதும், எவருக்கும் தலைகுனியாது !

நிராகரித்த ஸ்டாலின், திமுக ஒரு “வெற்றிக் கூட்டணி” என்பதால் தான் கட்சிகள் இதில் இணைந்துள்ளன என்றார். இந்தத் தேர்தலை **“தமிழ்நாடு அணி** vs **டெல்லி அணி”** என்று அடையாளப்படுத்திய அவர், “அதிமுகவின் முதுகில் சவாரி செய்து, பின்வாசல் வழியாகத் தமிழ்நாட்டிற்குள் நுழைய பாஜக முயல்கிறது” என்று குற்றம் சாட்டினார். மேலும், ‘இல்லத்தரசி’ திட்டமே இந்தத் தேர்தலின் “சூப்பர் ஸ்டார்” என்றும் அவர் அழைத்தார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

தொடர்ந்து தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் கேட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

**செய்தியாளர்:** *தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பே நீங்கள் பல மாவட்டங்களுக்குப் பயணம் செய்தீர்கள். இப்போது, தேர்தல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக ஏற்கனவே பல இடங்களுக்கும் சென்று வந்துள்ளீர்கள். மக்களின் மனநிலை எப்படி இருக்கிறது? ஏதேனும் மாற்றங்களை நீங்கள் காண்கிறீர்களா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** “திராவிட மாடல் 2. 0 ஆட்சி அமைய வேண்டும்” - இதுதான் தமிழ்நாடு முழுக்க மக்களின் மனநிலையாக இருக்கிறது. எண்ணற்ற சாதனைத் திட்டங்களை நிறைவேற்றி, சூப்பர்ஸ்டார் மாநிலம் எனத் தமிழ்நாட்டை உயர்த்தியுள்ள திராவிட மாடல்தான், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது.

### எங்கள் மீது மக்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளது!

பேரறிஞர் அண்ணா சொன்னது போல், எப்போதும் நாங்கள் மக்களுடன் இருந்து, அவர்களுக்காகவே பணியாற்றுகிறோம்; உழைக்கிறோம். அதனால்தான் மக்கள் எங்கள் மீது அதிகளவு நம்பிக்கையும் அன்பும் வைத்துள்ளனர். எங்கள் மீதான நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறதே தவிர குறையவில்லை. மக்களின் பேராதரவுடன் மீண்டும் திராவிட மாடல் ஆட்சியை அமைப்பது உறுதி.

**செய்தியாளர்:** *பாஜக மீதான உங்களின் தொடர்ச்சியான விமர்சனங்கள், மாநில உரிமைகளுக்காக முன்னின்று குரல் கொடுப்பது மற்றும் உங்கள் ஆட்சியை “திராவிட மாடல்” என்று அடையாளப்படுத்துவது ஆகியவற்றின் மூலம், உங்கள் தந்தை விட்டுச் சென்ற பெரும் நிழலில் இருந்து நீங்கள் ஒருவழியாக வெளியே வந்து விட்டீர்கள் என்று சொல்லலாமா? திராவிட இயக்கத்தின் பாரம்பரியத்தை நீங்கள் முன்னெடுத்துச் செல்கிறீர்கள், ஆனால் அதில் ஒரு தனித்துவமான “ஸ்டாலின் சுவை” (Stalin flavour) தெரிகிறது. இது உண்மையானால், அந்த “ஸ்டாலின் சுவை” என்பதை நீங்கள் எப்படி வரையறுப்பீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** இந்த ஸ்டாலின் தனிப்பட்டவன் கிடையாது. நான் முன்பே சொன்னதைப் போல திராவிடத் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது நீட்சியே இந்த ஸ்டாலின். அவர்களின் வழியில் நடக்கும் ஆட்சியே திராவிட மாடல் ஆட்சி. நீதிக்கட்சி தொடங்கி இன்று தொடரும் திராவிட மாடல் ஆட்சி வரை தமிழ்நாட்டின் உரிமை, சுயமரியாதை, தமிழ் மொழி, பண்பாடு ஆகியவற்றைக் கொள்கை உறுதியோடு நின்று பாதுகாத்து அனைவருக்குமான வளர்ச்சியைச் சாத்தியப்படுத்தி உள்ளோம். இதுதான் உங்கள் மொழியில் சொன்னால் Stalin Flavour. என் மொழியில் சொன்னா Dravidian Flavour.

### மகளிர் உரிமைத் தொகை திட்டம் மற்றவர்களை வியப்பில் ஆழ்த்தியது!

**செய்தியாளர்:** *உங்கள் அரசு அறிமுகப்படுத்திய அனைத்துப் புதிய நலத்திட்டங்களில், பயனடைந்த மக்களின் எண்ணிக்கை அல்லது அந்தத் திட்டம் ஏற்படுத்திய தரமான மாற்றம் ஆகியவற்றின் அடிப்படையில், உங்களுக்குப் பிடித்தமான ஒரு திட்டத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால், அது எதுவாக இருக்கும்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** விடியல் பயணம், புதுமைப் பெண், நான் முதல்வன், அன்புக் கரங்கள் திட்டம் என நிறைய திட்டங்கள் எனக்குப் பிடித்த திட்டங்களாக இருந்தாலும் என் மனதிற்கு மிக மிக நெருக்கமான திட்டங்கள் இரண்டு உண்டு.

ஒன்று, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். குடும்பத்திற்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் எந்த வித எதிர்பார்ப்புமின்றி, உழைப்பிற்கு அங்கீகாரம்கூட இன்றி உழைத்துக்கொண்டே இருக்கும் பெண்களுக்கு அரசின் சார்பில் அங்கீகாரம் அளிக்கவேண்டும் என்று நினைத்து நாங்கள் கொண்டு வந்த இந்தத் திட்டம் மகளிர் முன்னேற்றத்தின் அடுத்தகட்ட நகர்வை சாத்தியப்படுத்தி உள்ளது. இந்த திட்டத்தை நாங்கள் அறிவித்தபோது, “இது எப்படிச் சாத்தியமாகும்? அவ்வளவு தொகையை எப்படி கொடுக்க முடியும்?” எனப் பேசிய அரசியல் எதிரிகளே கூட இப்போது சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுள்ள மகளிர் உரிமைத் திட்டத்தைக் கண்டு வியந்து அவர்கள் மாநிலங்களில் செயல்படுத்தும் நிலையை உருவாக்கி உள்ளோம்.

மற்றொரு திட்டம், மனதிற்கு நெருக்கம் மட்டுமல்ல என் இதயத்தில் இடம்பெற்ற திட்டம் பள்ளிக் குழந்தைகளின் பசியாற்றும் காலை உணவுத் திட்டம். இந்தத் திட்டத்திற்கான நிதி குறைவுதான். ஆண்டுக்கு 400 500 கோடி ரூபாய்தான் ஆனால் அதன் பலன் அளவிட முடியாதது. நாம் பெற்ற பிள்ளை பசியோடு பள்ளிக்குப் போவதை நம் மனம் ஏற்குமா.? நம் பிள்ளை என்ன.. பிறர் பிள்ளை என்ன . . பசி எல்லோருக்கும் ஒன்றுதானே! குடும்பச் சூழ்நிலை காரணமாகப் பல இலட்சம் குழந்தைகள் காலையில சாப்பிடாமல் பள்ளிக்கு வந்ததை இன்று மாற்றியுள்ளோம். பிள்ளைகள் வயிறு நிறைந்து நன்கு படிக்கிறார்கள். இந்த திட்டத்தை செயல்படுத்தியது உண்மையிலேயே என் மனதை நிறைவாக்கிவிட்டது.

### கூட்டணியில் அதிகக் கட்சிகள் வெற்றியை அதிகப்படுத்தும்!

**செய்தியாளர்:** *ஒவ்வொரு முக்கிய கூட்டணிக் கட்சியையும் தக்கவைத்துக்கொள்வதோடு, அதை மேலும் விரிவுபடுத்தும் சாத்தியமற்ற காரியத்தையும் நீங்கள் செய்துள்ளீர்கள். ஆனால் இத்தகைய விரிவாக்கம் ஒரு விலையோடுதான் வருகிறது - இடப் பங்கீடு, சித்தாந்த ஒற்றுமை மற்றும் உங்கள் சொந்தக் கட்சியினரின் எதிர்பார்ப்புகளைச் சரிசெய்தல் எனப் பல சவால்கள் உள்ளன. இதற்காக திமுக எதையெல்லாம் விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது? அமோக வெற்றி கிடைக்கும் என்று நீங்கள் ஏற்கனவே நம்பிக்கை தெரிவித்திருக்கும் நிலையில், இந்த விரிவாக்கம் ஏன் தேவைப் பட்டது?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** எங்களின் கூட்டணி வெற்றிக் கூட்டணி என்பதால்தான் புதிய கட்சிகளும் எங்களோடு இணைந்து செயல்பட விரும்பி வந்து இணைந்துள்ளனர். எதிர்த்தரப்பில் இருந்தவர்கள் கூட எங்களைத் தேடிவரும் வகையில் ஐந்தாண்டு திராவிட மாடல் நல்லாட்சியை வழங்கி உள்ளோம். ஏற்கெனவே வலிமையாக இருந்த கூட்டணி இப்போது மேலும் வலிமையடைந்துள்ளது. கூட்டணியில் புதிய கட்சிகள் வருவதால் அனைவரின் வெற்றி வாய்ப்பும், வாக்கு வித்தியாசமும் அதிகரிக்கிறது. ஆகவே எந்த முரண்களும் இல்லை. 200 தொகுதிகளுக்கு மேல் நாங்கள் வெல்வது உறுதி.

**செய்தியாளர்:** *ஒரே மாதிரியான சித்தாந்த அர்ப்பணிப்பு இல்லாத கூடுதல் கட்சிகளைக் கூட்டணியில் இணைத்தது, உறவுகளில் சில கசப்புகளையும், தொகுதிப் பங்கீட்டில் தாமதத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இது, ஏதேனும் ஒரு வகையில் பாதிக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** எங்கள் கூட்டணிக்குள் எந்த விரிசலும் இல்லை. கால தாமதமும் இல்லை. விரிசல் விழாதா என ஏங்கித் தவித்தவர்கள்தான் ஏமாந்து போனார்கள். எங்கள் கூட்டணிப் பேச்சுவார்த்தை எல்லாம் எங்களின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில்தான் நடந்தது. மற்றவர்களைப் போல டெல்லியில் நடக்கவில்லை. தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் உள்ள அனைவரும் தமிழ்நாட்டின் நலனை முன்னிறுத்தி மதச்சார்பற்ற முற்போக்குக் கொள்கைகளை ஏற்றவர்கள்தான்.

**செய்தியாளர்:** *விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மதிமுக மற்றும் சிபிஎம் உள்ளிட்ட உங்கள் கூட்டணிக் கட்சிகளின் சில தலைவர்கள் ஒரு கவலையை வெளிப்படுத்தியுள்ளனர். அதாவது, திமுக, அதிமுக அல்லது பாஜக எனப் பெரிய கட்சிகள், சிறிய கூட்டணிக் கட்சிகளைத் தங்கள் சின்னத்திலேயே போட்டியிடுமாறு வற்புறுத்தும் இந்தப் போக்கு குறித்து அவர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர். இதற்கு உங்கள் பதில் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தேர்தலின் போது சின்னம் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. வெற்றி வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு புதிய சின்னத்தில் நிற்பதற்கு பதிலாக ஏற்கனவே மக்களிடம் செல்வாக்குப் பெற்ற சின்னங்களில் நிற்கின்றனர். மற்றவர்களைப் பற்றி தெரியாது; எங்கள் கூட்டணியில் பல்வேறு கட்சியினரும் மக்களிடம் செல்வாக்குப் பெற்ற உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட விரும்பிச் சின்னத்தைப் பெற்று நிற்கின்றனர்.

**செய்தியாளர்:** *பாஜக தமிழ்நாட்டின் மீது தொடர்ந்து அதிக கவனம் செலுத்தி வருகிறது. நாம் தமிழர் கட்சி மெதுவாகவும் அதே சமயம் சீராகவும் தனது வாக்கு சதவீதத்தை அதிகரித்து வந்துள்ளது. மேலும், தமிழக வெற்றி கழகம் என்ற புதிய வரவும் உள்ளது. இது திமுக தலைமையிலான கூட்டணியில் என்ன மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** எத்தனை பேர் வந்தாலும் எத்தனை முனை போட்டி அமைந்தாலும் வெற்றி தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்குத்தான்.

**செய்தியாளர்:** *இந்தத் தேர்தலைத் தமிழ்நாடு மற்றும் டெல்லிக்கு இடையிலான போராட்டமாக நீங்கள் முன்னிறுத்துகிறீர்கள். ஆனால் உங்கள் முதன்மை அரசியல் எதிரியான அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி, “இது தமிழ்நாட்டிற்கான தேர்தல்; அரசின் தோல்விகளை மறைக்கவே நீங்கள் டெல்லியை இலக்கு வைக்கிறீர்கள்” என்று கூறுகிறார். இதற்கு உங்கள் பதில் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் டெல்லியின் தலையீடு இல்லை என்றால் எதற்காகக் கூட்டணியின் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தை நடத்தக் கூட டெல்லிக்கு ஓடினார் பழனிசாமி. தமிழ்நாட்டை நேர்வழியில் நின்று மக்கள் ஆதரவைப் பெற்று வெல்ல முடியாத பா.ஜ.க.வானது, அ.தி.மு.க. முதுகில் ஏறிப் புறவாசல் வழியாக நுழையப் பார்க்கிறது என்பது பட்டவர்த்தனமான உண்மை. இந்தத் தேர்தல் என்பது தமிழ்நாடு அணி Vs டெல்லி அணிதான். தமிழ்நாட்டின் நலன் காக்கும் எங்கள் அணிக்கும் தமிழ்நாட்டை நாசம் செய்யக் காத்திருக்கும் அவர்கள் அணிக்குமான தேர்தல். இதில் உறுதியாகத் தமிழ்நாடு வெல்லும்!

**“இந்த ஸ்டாலின் தனிப்பட்டவன் கிடையாது. நான் முன்பே சொன்னதைப் போல திராவிடத் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது நீட்சியே இந்த ஸ்டாலின். அவர்களின் வழியில் நடக்கும் ஆட்சியே திராவிட மாடல் ஆட்சி. நீதிக்கட்சி தொடங்கி இன்று தொடரும் திராவிட மாடல் ஆட்சி வரை தமிழ்நாட்டின் உரிமை, சுயமரியாதை, தமிழ்மொழி, பண்பாடு ஆகியவற்றைக் கொள்கை உறுதியோடு நின்று பாதுகாத்து அனைவருக்குமான வளர்ச்சியைச் சாத்தியப்படுத்தி உள்ளோம். இதுதான் உங்கள் மொழியில் சொன்னால் Stalin Flavour. என் மொழியில் சொன்னா Dravidian Flavour.”**


PIC: P JAWAHAR

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்